05.08.2026

Electricity O.P No.121/2019
ம.த.சா–1
பெயர் – செந்தில்நாதன்

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில்குறுக்கு விசாரணை</u>**

ஸ்ரீ ஸ்கந்தா நிறுவனத்தில் நடைபெற்றதாக கூறப்படும் மின்திருட்டு சம்மந்தமாக இந்த வழகு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த நிறுவனத்திற்காக எந்த அடிப்படையில் நான் இந்த வழககுதாக்கல் செய்துள்ளேன் என்ற விபரத்தை சொல்லவில்லை என்றால் சரியல்ல. சாட்சி தான் இயக்குநர் என்று கூறுகிறார். நான் தாக்கல் செய்துள்ள ஆவண நடவடிக்கைகளில் நான் நேரில் ஆஜரானதாக அதில் விபரம் இல்லை என்றால் சரிதான். சாட்சி தான் அப்போது இயக்குநர் இல்லை என்று கூறுகிறார். மின்சாரவாரிய குழுவினர் 13.09.2002 ல் ஆய்வு செய்தார்கள். நிறுவனத்திற்கு 550 கிலோவாட் மின்சாரம் தேவைப் படுவதாக கொடுத்த விண்ணபத்தின்பேரில்தான் மின் இணைப்பு வழங்கப்பட்டது என்றால் சரிதான். 1997 ம் வருடம் மின் இணைப்பு கணக்கிடப்படும் பழைய மீட்டரை எடுத்துவிட்டு TOD Electronic Meeter பொருத்தப்பட்டது என்றால் சரிதான். 02.05.2002 முதல் 13.09.2022 வரையிலான 134 நாட்கள் எங்களது நிறுவனத்தில் 6,40,968 யூனிட் மின்சாரம் திருடப்பட்டுள்ளதாகவும், அதனால் மின்வாரியத்திற்கு 69,81,735 ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும், உரிய நடவடிக்கை கேட்டு மின்வாரியத்தால் சாமிநாதபுரம் காவல்நிலையத்தில் புகார் கொடுககப்பட்டு அதன்பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த முதல் தகவல் அறிக்கையின் நகலை மனுவுடன் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட தேதியில் தற்போது நடைமுறையில் உள்ள மின்சார சட்டம் அமுலுக்கு வரவில்லை

என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையை நான் படித்துப்பார்த்தேன். முதல்தகவல்அறிக்கையானது பழைய மின்சார சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். 24.08.2007 ம் தேதிய மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை பிறப்பித்த உத்தரவில் பழைய மின்சார சட்டத்தின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை ரத்து செய்யப்பட்டுள்ளது என்றால் பகுதியாக ரத்து செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கை விசாரிப்பதற்கு இந்நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த நீதிப்பேராணை மனுவின் உத்தரவிற்கு எதிராக மின்சார வாரியம் மேல்முறையீடு தாக்கல் செய்த விபரம் எனக்கு தெரியும். அந்த மேல்முறையீட்டில் உரிய ஆவணங்களை மில்நிர்வாகத்திற்கு மின்சார வாரியம் கொடுத்து உரிய விசாரணை செய்து முடிவு எடுக்கலாம் என்று சொல்லப்பட்டது என்றால் தள்ளுபடி செய்யப்பட்டது. மின்திருட்டு சம்மந்தமாக பழனி நீதித்துறை நடுவர் மன்றத்தில் ஆண்டுபட்டிகை வழககு எண். 373/2003 வழக்கு நடந்து கடந்த 08.09.2025 அன்று அதில் தீர்ப்பு பகரப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த தீர்ப்பில் கூறப்பட்டுள்ள விபரம் எனக்கு தெரியும். அந்த தீர்ப்பை நான் படித்து பார்க்கவில்லை. மேற்படி தீர்ப்பில் 1ம் எதிரியின் நிறுவனத்தால் மின்சாரம் திருடப்பட்டுள்ளது என்று தெளிவாக நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், 1ம் எதிரி வழக்கு நிலுவையில் இருந்தபோது இறந்துவிட்டார் என்றும், மற்ற எதிரிகள் திருட்டு சம்பவத்தில் ஈடுபட்டதாக போதுமான சாட்சிகள் இல்லாததாலும், எதிரிகள் விடுதலை செய்யப் பட்டார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

எனது நிரூபண வாக்குமூலத்தில் மின்சாரதுறை உயர் அதிகாரிகள் மின்திருட்டு பிரச்சனை சம்மந்தமாக விசாரணை செய்ய முடியாது என்று தவறாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. கடந்த 25.06.2019 ம் தேதி எதிர்மனுதாரர் பிறப்பித்த உத்தரவு சட்டப்படி செல்லும் என்றால் சரியல்ல.

அந்த உத்தரவுபடி இதுநாள் வரை ரூபாய் 1,78,61,716/- செலுத்தாததால் மின்சார வாரியத்திற்கு இழப்பு ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மனுவில் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

PADMANABAN VENKATASAMY

Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.08.05 15:34:47 +0530

Principal District Judge,
Dindigul